# பதுளை தமிழோவியனின் கவிதைகள் - ஓர் ஆய்வு

LIBRARY
14 MAY 2025
EASTERN UNIVERSITY, SRI LANKA

பெயர் :- செல்வி. லக்ஷிகா அருச்சுனன்

பதிவு இலக்கம் :- EU/IS/2018/AC/363

சுட்டெண் :- CS8763

FACULTY OF ARTS & CULTURE
27 DEC 2024
Eastern Unive

FAC1533
Project Report
Main Library, Eastern University, Sri Lanka

இவ்வாய்வுக் கட்டுரையானது இளங்கலைமாணி சிறப்புக்கற்கை நெறியின் இறுதி வருட பரீட்சையின் ஓர் அலகாகக் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீட தமிழ் கற்கைகள் துறைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

தமிழ் கற்கைகள் துறை

கலைகலாசார பீடம்

கிழக்குப் பல்கலைக்கழகம்

இலங்கை

2024

# முன்னுரை

1815 இல் பிரித்தானியர் கண்டி இராஜ்யத்தைக் கைப்பற்றி பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு தென்னிந்தியர்கள் இலங்கைக்கு ஆயிரக்கணக்கில் உழைப்பாளர்களாக வந்தனர். அவ்விதம் வந்த மக்கள் கூட்டத்தினர் வனப்பிரதேசத்தில் கடுமையாக உழைத்தனர். அந்த உழைப்பாளி மக்களின் வருகையின் பின்னர் கண்டியின் சுற்று வட்டாரமெங்கிலும் ஒலித்த தமிழ் மலைநாடெங்கும் ஒலிப்பதாயிற்று. இத்தமிழ் மக்கள் தங்களது அடையாளத்தை பரவலாக்குவதிலும் அதற்கு விரிந்த அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதிலும் இலக்கியம் முதலான எழுத்துச் செயற்பாடுகளிலும் ஈடுப்பட்டனர்.

மலையக மண்வாசனையுடன் அம்மக்களது வாழ்வியலை கவிதைகளின் ஊடாக வெளியுலகிற்கு பறைசாற்றிய கவிஞர் பதுளை தமிழோவியனை மையப்படுத்தியதாக இவ்வாய்வு அமைகின்றது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயிலும் நான் இளங்கலைமாணித் தேர்விற்காக பதுளை தமிழோவியனின் கவிதைகள் - ஓர் ஆய்வு என்ற தலைப்பில் அவரது படைப்புக்களை ஆய்வு செய்து ஓர் ஆய்வேடாகச் சமர்ப்பிக்கின்றேன்.

கவிஞர்களுக்கும் சமூகத்திற்கும் இடையிலான தொடர்பு மற்றும் அவர்களின் இலக்கியப் படைப்புக்களில் சமூகமானது எவ்வாறான தாக்கத்தை செலுத்தியுள்ளது என்பதை உள்ளார்ந்த ரீதியாக பார்ப்பது குறைவாகும். இதனால் ஆளுமை மிக்க மலையக எழுத்தாளர்கள் இன்னும் அறியப்படாமலே இருக்கின்றனர். இலக்கியப்படைப்புக்களில் கற்பனைக்கு அப்பால் அவை உருவாகுவதற்கான பின்புலத்தினை அறிவது அவசியமாகிறது. எனவே இவ்வாறான ஆய்வுகளை மேற்கொள்வது பயனுடையதாகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் காணப்படுகிறது.

இலக்கிய கர்த்தாக்களும் அவர்களுடைய இலக்கிய முயற்சிக்கும் சமூகத்திற்குமான தொடர்பினை கண்டறிதல் எனும் நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

இவ்வாய்வானது ஐந்து அத்தியாயங்களைக் கொண்டமைந்துள்ளது. முதலாவது அத்தியாயம் “ஆய்வு அறிமுகம்” எனும் தலைப்பில் அமைகிறது. இந்த அத்தியாயத்தில் ஆய்வின் தலைப்பு, ஆய்வின் அறிமுகம், ஆய்வு பின்னணி, ஆய்வு நோக்கம், ஆய்வு பிரச்சினை, ஆய்வு முறையியல், ஆய்வு மூலங்கள், ஆய்வு வரையறை, இலக்கிய மீளாய்வு மற்றும் ஆய்வு அமைப்புமுறை என்பன பற்றி எடுத்துக்கூறப்படுகின்றது.

இரண்டாவது அத்தியாயமானது பதுளை தமிழோவியனின் வாழ்க்கையும், இலக்கிய பிரவேசமும் என்ற தலைப்பில் அமைகிறது. இதில் பதுளை

தமிழோவியனின் பிறப்பு, குடும்ப வாழ்வு, கல்விச் சூழல், இல்லற வாழ்வு, இலக்கியப்பிரவேசம், இலக்கியப்படைப்புகள், அவர் பெற்றுக் கொண்ட பரிசில்கள் மற்றும் விருதுகள் பற்றிய செய்திகள் தரப்படுகின்றன.

மூன்றாவது அத்தியாயமானது மலையக கவிதைகளின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற தலைப்பில் மலையக இலக்கியங்கள் தொடர்பான அறிமுகம் மற்றும் மலையகக் கவிதைகள் பற்றி விபரிக்கின்றது.

நான்காவது அத்தியாயமானது பதுளை தமிழோவியனின் கவிதைகளின் உள்ளடக்கமும் உத்திமுறைகளும் என்ற தலைப்பில் அமைந்துள்ளது. இதில் தமிழோவியனின் இலக்கிய முயற்சியின் பின்புலமும், கவிதைகளின் உள்ளடக்கம் மற்றும் கவிதைகளில் கையாளப்பட்டிருக்கும் உத்திமுறைகள் என்பன பற்றி ஆராய்ந்து மதிப்பீடு செய்யப்படுகின்றது.

ஐந்தாவது அத்தியாயம் தொகுப்புரையும் மதிப்பீடும் என அமைகின்றது. இவ்வத்தியாயத்தில் ஆய்வில் உள்ள விடயங்கள் பற்றி தொகுத்துக் கூறுப்படுவதோடு ஆய்வின் முடிவுகள் தொடர்பான மதிப்பீடும் இடம்பெறுகின்றது.

இறுதியில் இவ்வாய்விற்கு உதவிய நூல்கள், இதழ்கள் மற்றும் நேர்காணல் மூலம் கிடைக்கப்பெற்ற தகவல்கள் என்பன தொடர்பான விடயங்கள் உசாத்துணை நூல்களாகத் தரப்படுகின்றன. அத்துடன் இவ்வாய்வோடு தொடர்புடைய ஏனையவை பின்னிணைப்புகளாகவும் இணைக்கப்படுகின்றன.

ஆய்வாளர்

# பொருளடக்கம்


உறுதியுரை .......................................................... III

நன்றியுரை .......................................................... IV


## அத்தியாயம் - ஒன்று


1.1. ஆய்வுத் தலைப்பு .......................................... 2

1.2. ஆய்வு அறிமுகம் .......................................... 2

1.3. ஆய்வுப் பின்னணி .......................................... 3

1.4. ஆய்வு நோக்கம் .......................................... 3

1.5. ஆய்வு பிரச்சினை .......................................... 3

1.6. ஆய்வு முறையியல் .......................................... 4

1.7. ஆய்வு மூலங்கள் .......................................... 4

1.8. ஆய்வு வரையறை .......................................... 4

1.9. இலக்கிய மீளாய்வு .......................................... 5

1.10. ஆய்வு அமைப்பு முறை .......................................... 5


## அத்தியாயம் - இரண்டு


2.0. பதுளை தமிழோவியனின் வாழ்க்கையும் இலக்கிய பிரவேசமும .................. 8

2.1. அறிமுகம் .......................................... 8

2.2. பிறப்பும் குடும்பவாழ்வும் .......................................... 9

2.3. தொழிலும் இலக்கிய பிரவேசமும் .......................................... 9

2.4. சேவைகள் .......................................... 12

2.5. பதுளை தமிழோவியனுக்கு கிடைத்த விருதுகளும் பரிசில்களும் கௌரவிப்புகளும் .......................................... 14

2.5.1 தமிழோவியன் பெற்றுக்கொண்ட பரிசில்களும் கௌரவிப்புகளும் .......... 14

2.5.2. விருதுகள் .......................................... 15

## அத்தியாயம் - மூன்று


3.0. மலையக கவிதைகளின் தோற்றமும் வளர்ச்சியும் .......................... 17

3.1. அறிமுகம்.................................................................................. 17

3.2. மலையக கவிதைகள் ................................................................... 17


## அத்தியாயம் - நான்கு


4.0. பதுளை தமிழோவியனின் கவிதைகளின் உள்ளடக்கமும், உத்திமுறைகளும் ................................................................................ 26

4.1. தமிழோவியனின் இலக்கிய முயற்சியின் பின்புலம். .......................... 26

4.2. தமிழோவியனின் கவிதைகள் ........................................................ 29

4.3.தமிழோவியன் கவிதைகளின் உள்ளடக்கம்.........................................30

4.3.1. மலையக மக்களின் சமூக, பொருளாதார நிலை ..............................31

4.3.2. இனவன்முறையும், சமூக விடுதலையும் .........................................43

4.3.3. மலையக பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ..........................49

4.3.4. காதல் வாழ்க்கை........................................................................60

4.3.5. மண்ணின் மீதான பற்றும், மொழிப் பற்றும ...................................64

4.3.5.1. மண்ணின் மீதான பற்று ...........................................................64

4.3.5.2. மொழிப்பற்று...........................................................................67

4.3.6. சமத்துவம் ................................................................................68

4.4. பதுளை தமிழோவியன் கவிதைகளில் கையாளப்பட்டுள்ள உத்திமுறைகள் ................................................................................ 71

4.4.1. நாட்டார் பாடல் அமைப்பு.............................................................72

4.4.2. கவிதையில் கதைப்பண்பு ............................................................73

4.4.4. மொழிநடை ...............................................................................76

4.4.5. வர்ணனை.................................................................................76

4.4.5.1. இயற்கை வர்ணனை.................................................................76

4.4.5.2. காதல் கவிதைகளில் வர்ணனை .................................................77

4.4.6. அணிப்பயன்பாடு .........................................................................77

4.4.6.1. உவமை அணி..........................................................................77

4.4.6.2. உருவக அணி..........................................................................79

4.3.6.3. உயர்வுநவிற்சி அணி.................................................................79

4.3.6.4. தற்குறிப்பேற்ற அணி ...............................................................80

## அத்தியாயம் - ஐந்து


5.0. தொகுப்பும் மதிப்பீடும் .................................................. 82

5.1. தொகுப்புரை .................................................. 82

5.2. மதிப்பீடு .................................................. 83

உசாத்துணைகள் .................................................. 86

பின்னிணைப்புகள .................................................. 88